# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இடைக்காலம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

9 x 2 = 18

1) சீனப் பெருஞ்சுவர்.

**பதில் :** (i)கி மு. (பொ.ஆ.மு) 8 மற்றும் 7 ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலப் பகுதியில் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்த சீன அரசுகள், வடக்கேயிருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுவர்களை எழுப்பிக் கொண்டன.
(ii) சின் அரசவம்சத்தின் காலத்தில் தனித்தனியாக இருந்த பல சுவர்கள் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 5000 கிலோ மீட்டர் நீளமுடைய பெருஞ்சுவர் உருவானது.
(iii)இச்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

2) சிலுவைப் போர்களின் தாக்கம்.

**பதில் :** (i)சிலுவைப் போர்கள் நிலப்பிரபுத்துவம் சார்ந்த உறவுகளுக்கு முடிவு கட்டியது.
(ii) மத்திய தரைக்கடல் பகுதியில் வெனிஸ், ஜெனோவா, பைசா ஆகிய நகரங்கள் முக்கிய வணிக மையங்களாகத் தோன்றின.
(iii)வலிமைவாய்ந்த நிலப்பிரபுக்கள் அழிந்து போனது ஒருவகையில் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் முடியாட்சி வலுப்பெறுவதற்கு காரணமாயிற்று.
(iv) போப்பாண்டவரும் அவருடைய ஆட்சிமுறையும் தங்கள் செல்வாக்கையும் மரியாதையும் இழக்க நேர்ந்ததாகும்.

3) இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது?

**பதில் :** (i)அரசர் நிலப்பிரபுத்துவத்தின் தலைவராகக் கருதப்பட்டார். அவர்களுக்கு அடுத்த நிலையில் கோமகன்களாகக் கருதப்பட்ட டியூக்குகள் 'கவுண்ட்'டுகள் 'யேல்'கள் போன்றோர் இருந்தனர்.
(II) இந்த நிலப்பிரபுக்கள், நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அரசரிடம் இருந்து நிலம் பெற்றுக் கொண்டு. அவருக்காக போரிட சம்மதித்த வகுப்பினர் ஆவர்.
(iii) அரசர் நிலங்களைப் பிரித்து இவர்களுக்குக் கொடுத்தார். இவர்கள் தாங்கள் பெற்ற நிலங்களை பிப் (Fiel) துண்டுகளாகப் பிரித்தனர். தங்களுக்குக் கீழிருந்த வைஸ் கவுண்ட் என்பவர்களுக்கு விநியோகம் செய்தனர்.
(iv) இவ்வரிசையில் இறுதி இடம் பெற்றவர்கள் நைட் (knight) எனப்படும் சிறப்புப்பணி வீரர்கள்.இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை வேறு எவருக்கும் பிரித்துத்தர முடியாது. இவர்கள் அனைவருக்கும் கீழ் அடிமட்டத்தில் இருந்தவர்கள் வில்லொயன் அல்லது செர்ப் என்றறியப்பட்ட பண்ணை அடிமைகள் ஆவர்.

4) இடைக்காலத்தில், சமயகுருமார்கள் தங்கள் அதிகாரத்தை வலியுறுத்தப் பயன்படுத்திய இரண்டு கருவிகள் யாவை?

**பதில் :** திருச்சபையானது படிப்பறிவில்லா தனது உறுப்பினர்கள் மீது தனது அதிகாரத்தை விரிவுபடுத்தியது. திருச்சபையிலிருந்து விலக்கிவைப்பது, மதவிலக்கு செய்வது எனும் இரண்டு கருவிகளைத் திருச்சபை தன்னை எதிர்ப்பவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியது.

5) உமையது ஆட்சியின் கட்டடக்கலை பற்றி கூறுக.

**பதில் :** 1. உமையது என்பவர்கள் நபிகள் நாயகத்தின் குடும்பத்தின் ஒரு உறவு வழியைச் சார்ந்தவர்கள், இவர்கள் ஒரு புதிய பாணியிலான கட்டடக்கலையை வளர்த்தனர். அதற்கு சாரசனிக் கட்டடக் கலை என்று பெயர்.
2. இந்தக் கட்டடக்கலையில் வளைவுகள் அமைந்த தூண்கள், கவிகை மாடங்கள், மினார் எனப்படும் கோபுரங்கள் கொண்டவையாகும்.
3. இவர்களின் கட்டடக்கலை இந்திய கட்டடக்கலை பாணிகளோடும் கலந்தது. இவர்களது தலைநகர் டமாஸ்கஸ் ஆகும்.

6) தாங் அரச வம்சத்தின் பொது பணியில் உருவான தலைநகரங்கள் எவை?

**பதில் :** போயாங், சாங் - ஆன்.

7) இடைக்காலத்தின் இந்தியாவில் ஸ்கந்தகுப்தரால் முறியடிக்கப்பட்ட எதிரிகள் யார்?

**பதில் :** ஹூண் இனக்கவர்களும், கடுமையான போர்க்குணம் கொண்ட மத்திய ஆசிய மக்கள்

8) சீனாவின் தொழில் வளர்ச்சி பற்றி கூறுக.

**பதில் :** 1. சீனாவில் வணிகமும் தொழில்களும் செழித்து வளர்ந்தன. எ்கு மற்றும் இரும்பு, தொழிற்சாலைகள் செழித்து வளர்ந்தன. அவைகள் கட்டுக்கோப்பாக நடத்தப்பட்டன.
2. 1078ல சீனா உற்பத்தி செய்த இரும்பு 114000 டன்னை தாண்டியது. செராமிக் ஓடுகள் மற்றும் பீங்கான் பொருட்கள் செய்வதிலும் தனித்திறன் பெற்று விளங்கியது.
3. வெடிமருந்து பயன்பாட்டிலும், அச்சடிக்கப்பட்ட புத்தகங்களையும் பல நாடுகளுக்கு அறிமுகம் செய்தது.
4. ஐரோப்பாவைக் காட்டிலும் 500 ஆண்டுகளுக்கு முன்பே பல துறைகளில் சீனா முன்னேறி இருந்தது.

9) பாக்தாத் நகர் பற்றி கூறுக.

**பதில் :** அப்பாசித்துக்கள் ஆட்சியில் ஈராக் நகரில் பாக்தாத் தலைநகர் ஆக்கப்பட்டது. பாக்தாத் நகர் அரேபிய இரவுகளின் நகரம் என அறியப்பட்ட நகரமாகும்.
இது அரண்மனைகள், பொதுக்கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும்.
உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்கள், குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்ததாத்திற்கு வந்தார்கள்.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u>

9 x 3 = 27

10) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கு அரேபியர்களின் பங்களிப்பு.

**பதில் :** அரேபியர்கள் அறிவியல் பூர்வமான கேள்வி ஞானம் உடையவர்களாக இருந்தனர். மருத்துவம், கணிதம் போன்ற துறைகள் தொடர்பான பலவற்றை அவர்கள் இந்தியாவிலிருந்து கற்றுக் கொண்டனர். பல அராபிய மாணவர்கள் மருத்துவக் கல்வி கற்பதற்காக தட்சசீலம் சென்றனர். தட்சசீலம் பெரும் பல்கலைக் கழகமாக மருத்துவத் துறையில் சிறந்து விளங்கியது. இந்திய அறிஞர்களும் கணிதவியலாளர்களும் அதிக அளவில் பாக்தாத் சென்றனர். மருத்துவம் மற்றும் பிற துறைகள் சார்ந்த சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பல இந்திய நூல்கள் அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அராபிய மருத்துவர்களும் அறுவை சிகிச்சை துறையில் புகழ் பெற்று விளங்கினர்.

11) அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கு அராபியர்களின் பங்களிப்பு.

**பதில் :** 1. அராபியர்களாக அறிவியல் பூர்வமான கேள்வி ஞானம் உடையவர்களாக இருந்தனர்.
2. மருத்துவம், கணதம் போன்ற துறைகள் தொடர்பான பலவற்றை அவர்கள் இந்தியாவிலிருந்து கற்றுக் கொண்டனர்.
3. பல அராபிய மாணவர்கள் மருத்துவக் கல்வி கற்பதற்காக தட்சசீலம் சென்றனர்.
4. மருத்துவம் மற்றும் பிற துறைகள் சார்ந்த பல இந்திய நூல்கள் அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.
5. அராபிய மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும் மருத்துவ, அறுவை சிகிச்சை துறையில் புகழ் பெற்று விளங்கினர்.

12) சூய வம்சத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

**பதில் :** சீனாவில் ஆட்சிப் பொறுப்பேற்ற சூயி அரசவம்சம் நாற்பது ஆண்டுகளில் வீழ்ச்சியைச் சந்தித்தது.
**காரணங்கள்:**
மிகப்பெரும் கால்வாய் அமைத்தல் போன்ற பொதுப்பணிகளால் ஏற்பட்ட பெரும் நிதிச்சுமை, வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மிகுந்த போர்கள்.

13) சன்னி, ஷியா பிரிவுகளின் தோற்றம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. அராபியத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகள் இஸ்லாமின் இரு பிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று.
2. அப்பிரிவுகள் சன்னி மற்றும் ஷியா என்று அழைக்கப்பட்டன.
**சன்னிப் பிரிவு** :
இஸ்லாமிய நாடுகளின் தலைமையும். நபிகளுக்குப்பின் அப்பொறுப்புக்கு வருவோரும் இஸ்லாத்தில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதிகளால் தோந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.
**ஷியா பிரிவு :**
அரசியல், மதத் தலைமைப் பொறுப்புகளை ஏற்போர் நபிகள் நாயகத்துடன் ரத்த உறவு கொண்டவர்களாகவும் அல்லது மண உறவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

14) பாக்தாத் நகரம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. பாக்தாத் "அரேபிய இரவுகள் நகரம்" என அழைக்கப்பட்ட நகரமாகும்.
2. இது அரண்மனைகள், பொதுக் கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும்.
3. பாக்தாத் வணிகர்கள் கிழக்கோடும் மேற்கோடும் பெரும் வணிகத்தைச் செய்தனர்.
4. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்கள் குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்தாத்திற்கு வந்தார்கள்.

15) "பிப்" < Fief > என்றால் என்ன?

**பதில் :** 1. 'பிப்' என்பது ஒருவருக்கு அவரைவிட மேல் நிலையில் இருக்கும் கோமகனால் வழங்கப்படும் நிலம்,
2. நிலத்தைப் பெற்றவர் நிலம் கொடுத்தவருக்கு கைமாறாக சில சேவைகளைச் செய்ய வேண்டும், அது அவருடைய கடமையாகும்.

16) 'திருச்சபை விலக்கம்' - குறிப்பு வரைக.

**பதில் :** 1. திருச்சபை விலக்கம் என்பது ஒரு மனிதன் கிறித்தவனாக இருப்பதால் என்ன உரிமைகளுக்குத் தகுதியானவரோ அவ்வுரிமைகள் அவருக்கு மறுக்கப்படுவதாகும்.
2. அவர் திருச்சபைக்குள் புனிதச் சடங்குகளைச் செய்ய முடியாது.
3. இறந்த பின்னர் அவருடைய உடலைத் திருச்சபைக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் புதைக்க முடியாது.
4. மதவிலக்கம் என்பது ஒரு அரசனுக்கு எதிராக அவரது குடிமகனை வெறுப்பு கொள்ளத் தூண்டுவதாகும்.

17) ஜப்பான் என்னும் பெயர் எப்படி வந்தது?

**பதில் :** (i) ஜப்பான் என்னும் பெயர் சீனப் பேரரசால் கொடுக்கப்பட்டதாகும். சீனப் பேரரசர் ஜப்பானிய அரசருக்கு அனுப்பிய செய்தியில் ஜப்பானை மாபெரும் சூரியன் உதிக்கும் நாடு (தாய்-நியா-புங்- காகி என விளித்திருந்தார்.
(ii) யமட்டோ என்ற பெயரைக் காட்டிலும் இப்பெயர் சிறப்பாக இருப்பதாக ஒப்பானியர் கருதினர். எனவே அவர்கள் தங்கள் நாட்டை டாய்-நிப்பான் (சூரியன் உதிக்கும் நாடு என அழைக்கத் தொடங்கினர். காலப்போக்கில் நிப்பான் மருவி ஜப்பான் ஆனது.

18) சுங் அரசவம்சத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

**பதில் :** சுங் அரசவம்சத்தின் ஆட்சியின் போது நிலஉடைமையாளர்களும் அரசு அதிகாரிகளும் பணம் படைத்த வணிகர்களும் மிக வளமான வாழ்கையை வாழ்ந்தனர். நேர்மாறாக சாதாரண விவசாயிகள் வறுமையில் வாடினர். வடக்கே இருந்து மேற்கொள்ளப்பட்ட இரு வெளிநாட்டவர் படையெடுப்புகள் சுங் வம்சத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

## <u>5 மதிப்பெண் வினாக்கள்</u>

6 x 5 = 30

19) சோகுனேட்களின் கீழ் ஜப்பானின் எழுச்சி பற்றி விரிவாகக் கூறுக.

**பதில் : சோகுனேட்களின் ஆட்சி உருவாதல் :**
(i) ஜப்பானில் தாரா, மினமோட்டா எனும் குடும்பங்களுக்கிடையே நடைபெற்ற போரில் யோரிடோமோ என்பவர் வெற்றி பெற்றார்.
(ii) கி.பி. (பொ.ஆ.பி) 1192 இல் பேரரசர் இவருக்கு செய் - ய் -தாய் - சோகன் என்னும் பட்டத்தைச் சூட்டினார்.
(iii) இப்பட்டம் பரம்பரை பரம்பரையாக ஆட்சி நடத்தும் உரிமையைக் கொண்டிருந்தது.
(iv) காலப்போக்கில் சோகன் உண்மையான ஆட்சியாளரானார். இவ்வாறு சோகுனேட்டுகளின் ஆட்சி உருவானது.
**எழுச்சி:**
(i) யோரிடோமா தனது ராணுவத் தலைமையகத்தை காமகுராவில் நிறுவினர். இதனால் முதல் சோகுனேட் காமகுரா சோகுனேட் என அழைக்கப்பட்டது.
(ii) வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஜப்பான் தனக்கேயுரிய வழிகளில் சீனத்தைப் பின்பற்றியது. பேரரசர் ஓர் அலங்காரத் தலைமையாக மட்டுமே இருந்தார்.
(iii) நிலப்பிரபுத்துவ ராணுவத்தன்மை கொண்ட அரசு சாமுராய் எனப்பட்ட இராணுவ வீரர்களால் நிர்வகிக்கப்பட்டது. மங்கோலியரை சோகோட்டுகளின் தலைமையில் ஜப்பான் வெற்றி கொண்டது.
(iv) இருந்தபோதிலும் இவ்வம்சத்தின் சரிவு தொடங்கியது. கி.பி. (பொ.ஆ) 1338-இல் காமகுரா சோகுனேட் வீழ்ச்சியடைந்தது.
(v) சோகோட்டுகளில் வேறொரு பிரிவைச் சேர்ந்த 'அஷிக்காகா' சோகுனேட்டுகள் ஆட்சியைக் கைப்பற்றினார். இவர்களின் ஆட்சி 235 ஆண்டுகள் நீடித்தது. இக்காலகட்டம் அரசியல் குழப்பங்களும் அதிகாரப் போட்டிகளும் நிறைந்ததாய் இருந்தது.
(vi) இறுதியில் மூவர் ஜப்பானை நீண்ட காலம் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களிலிருந்து மீட்டனர். அவர்கள் போர்புநகா என்ற பிரபு, டய்ம்யாஸ் அல்லது ஹிடயோஷி எனப்பட்ட விவசாயி, தொகுகவா இய்யாசு என்ற அக்காலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பிரபு ஆகியோராவர்.
(vii) 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜப்பான் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டது.

20) மங்கோலியர்கள் என்பவர் யார்? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்?

**பதில் : மங்கோலியர்கள்:**

(i)மங்கோலியர்கள் ஆசிய ரஷ்யாவின் ஸ்டெப்பிஸ் மேய்ச்சல் நிலப்பகுதியிலிருந்து ஐரோப்பாவிற்குள் நாடோடிகளாக வந்தவர்கள்.

(ii)அவர்கள் கால்நடை மேய்ப்பவர்கள் ஆவர்.

(iii)போர்த்திறன் கொண்ட அவர்கள் செங்கிஸ்கான் எனும் மகத்தான தலைவனை உருவாக்கினார்கள்.

**சீனாவில் மங்கோலிய ஆட்சி :**

(i)சுங் வம்சத்தவர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, யுவான் வம்சத்தினர் என்ற பெயரில் மங்கோலியர்கள் சீனாவில் தங்கள் ஆட்சியை நிறுவினர்.

(ii)பாரசீகத்தையும் ஒட்டுமொத்த மத்திய ஆசியாவையும் கைப்பற்றிய மங்கோலியர்கள் சீனாவையும் விட்டுவைக்கவில்லை. கி.பி. (பொ.ஆ). 1252 - இல் மாபெரும் 'கான்' ஆக மங்குகான் குப்ளேகானை சீனாவின் ஆளுநராகப் பணியமர்த்தினார்.

(iii)யுரேசியாவின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை பரவியிருந்த மங்கோலியரின் ஆதிக்கம், சீனாவின் தொழில்நுட்ப முன்னேற்றங்களை இதர வளர்ச்சி குன்றிய மேற்கு சமூகங்களிடையே பரப்புவதற்கு உதவியது.

(iv)பெய்ஜிங்கிலிருந்த மங்கோலியரின் அரச சபை மார்க்கோபோலோ போன்ற வெளிநாட்டவரிடம் நன்மதிப்பை ஏற்படுத்தி இருந்த போதிலும் விவசாயிகள் தொடர்ந்து வறுமையில் வாடினர்.

(v)சில மதம் சார்ந்த அமைப்புகளும் ரகசிய அமைப்புகளும் புரட்சியில் இறங்கின. முடிவில் 'சிகப்பு தலைப்பாகைகள்' என்ற அமைப்பின் தலைவரான சூ யுவான் சங், தலைநகர் பெய்ஜிங்கைக் கைப்பற்றி கி.பி. (பொ .ஆ) 1369 இல் தன்னை பேரரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

21) முகமது நபி பற்றி விவரி.

**பதில் :** 1. முகமது நபி (நபிகள் நாயகம்) இஸ்லாம் சமயத்தைத் தோற்றுவித்தார்.

2. இஸ்லாம் சகோதரத்துவம் என்னும் கருத்தை முன் வைத்தது.

3. இஸ்லாமியர் அனைவரும் சரிசமமானவர்கள் எனும் கருத்தினை முகமது அழுத்தமாகக் கூறினார்.

4. சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய கருத்துகள் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டிருந்த அராபிய இனக் குழுக்களுக்கும், உலகின் ஏனைய பகுதிவாழ் மக்களுக்கும் ஏற்புடையதாய் இருந்தது

5. தான் பிறந்த ஊரில் சந்தித்த இடர்பாடுகளின் காரணமாய் நபிகளும் அவரைப் பின்பற்றியோரும் மெக்காவிலிருந்து எதிரிப் என்னும் நகருக்கு இடம் பெயர்ந்தனர்.

6. கி.பி. (பொ.ஆ.பி) 622 - இம் நபிகள் மெக்காவை விட்டு இடம் பெயர்ந்த நிகழ்வு அராபிய மொழியில் 'ஹிஜிரா' என அழைக்கப்படுகிறது.

7. நபிகளின் வருகையைச் சிறப்பிக்கும் வகையில் எத்ரிப் நகர மக்கள் தங்கள் நகரத்திற்கு மதினாட் - உன் - நபி (நபிகள் நாயகத்தின் நகரம்) எனப் புதுப்பெயர் சூட்டினர்.

8. ஹிஜிராவிற்குப் பின்னர் கி.பி. (பொ.ஆ.பி) 632 - இல் நபிகள் இயற்கை எய்தினார்.

9. அவர் இயற்கை எய்தும் தருவாயில் இஸ்லாமின் கருத்துகளால் ஒருங்கிணைக்கப்பட்டு அராபியர்கள் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாகினர்.

22) திருச்சபை பற்றி விவரி.

**பதில் :** 1. இடைக்காலத்தின் இறுதிப் பகுதியில் கிறித்தவ மதம் குறிப்பிடத்தகுந்த பல வளர்ச்சிகளுக்கு உள்ளாயிருந்தது,

2. அவைகளில் முக்கியமானவை கோட்பாடு சார்ந்ததும் மத நடைமுறைகள் சார்ந்ததும் ஆகும்.

3. கிறித்தவ இறையியலில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. அவை சமய குருமார் கோட்பாடு மற்றும் புனிதச் சடங்குகள் பற்றியனவாகும்.

4. இவ்விரு அம்சங்களும் சமய குருமார்களின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தன.

5. இவற்றின் மூலம் திருச்சபையானது படிப்பறிவில்லா தனது உறுப்பினர்கள் மீது தனது அதிகாரத்தை விரிவுபடுத்தியது.

6. திருச்சபையிலிருந்து விலக்கிவைப்பது, மத விலக்கு செய்வது எனும் இரண்டு கருவிகளை திருச்சபை தன்னை எதிர்ப்பவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தியது.

7. இடைக்காலத்தின் இறுதியில் திருச்சபையின் வளர்ச்சியோடு பேராசை மிக்க அரசியல் தலைவர்களின் எழுச்சியும் ஏற்பட்டது.

8. சமயம் சார்ந்த அதிகாரம் கொண்டவர்கள், சமயம் சாரா அதிகாரம் கொண்டவர்கள் ஆகியோரிடையே மோதல்கள் ஏற்படுவது தவிர்க்க இயலாமல் போனது.

9. ஜெர்மன் நாட்டுப் பேரரசர் நான்காம் ஹென்றிக்கும், போப்பாண்டவர் ஏழாம் கிரிகோரிக்கும் ஏற்பட்ட மோதலில் போப் மதவிலக்கம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி பேரரசரைப் பதவி விலகச் செய்தார்.

10. போப் மூன்றாம் இன்னோசன்ட் இங்கிலாந்தும். அயர்லாந்தும் திருச்சபைக்குச் சொந்தமானவை என அரசர் ஜானை அங்கீகரிக்க வைத்தார்.

11. பல கிறித்தவ சமயப் பற்றாளர்கள் போப்பாண்டவர் அரசு அதிகாரத்தில் தலையிடுவதை வெறுக்கத் தொடங்கினர்.

23) இஸ்லாமும், இஸ்லாமிய பேரரசுகளின் தோற்றமும் பற்றி விளக்குக.

**பதில் :** (i) நபிகள் நாயகம் (முகமது நபி) இஸ்லாமைத் தோற்றுவித்தார். இஸ்லாம் 'சகோதரத்துவம்' என்னும் கருத்தை முன் வைத்தது. இஸ்லாமியர் அனைவரும் சரிசமமானவர்கள் எனும் கருத்தினை முகமது அழுத்தமாகக் கூறினார்.
(ii) சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இக்கருத்துக்கள் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டிருந்த அராபிய இனக் குழுக்களுக்கும், உலகின் ஏனைய பகுதிவாழ் மக்களுக்கும் ஏற்புடையதாய் இருந்தது.
(iii) ஆனால் பிறந்த ஊரில் சந்தித்த இடர்ப்பாடுகளின் காரணமாய் நபிகளும் அவரைப் பின்பற்றுவோரும் மெக்காவிலிருந்த எத்ரிப் என்னும் நகருக்கு இடம் பெயர்ந்தனர்.
(iv) கி.பி. (பொ.ஆ) 622-இல் மெக்காவை விட்டு நபிகள் இடம்பெயர்ந்த நிகழ்வு அராபிய மொழியில் ஹிஜிரா (Hijrah) என அழைக்கப்படுகிறது. அவருடைய வருகையைச் சிறப்பிக்கும் வகையில் எத்ரிப் நகர மக்கள் தங்கள் நகரத்திற்கு மதினாட்-உன்-நபி (நபிகள் நாயகத்தின் நகரம்) எனப் புதுப்பெயர் சூட்டினர். தற்போது அது மெதினா என அழைக்கப்படுகிறது.
(v) ஹிஜிராவிற்குப் பின்னர் பத்து ஆண்டுகள் கழித்து கி.பி. (பொ.ஆ) 632-இல் நபிகள் இயற்கை எய்தினார். அவர் இயற்கை எய்தும் தருவாயில் இஸ்லாமின் கருத்துக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு அராபியர்கள் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாயினர்.

24) பாலைவனங்களில் வாழ்நத சாராசென்ஸின் ஆட்சியை பற்றி கூறுக.

**பதில் :** 1. சகாரா மற்றும் நஸின் என்னும் இரு சொற்களின் இணைப்பு சாராசென்ஸின் ஆகும். இதன் பொருள் பாலைவனத்தில் வாழ்பவர்கள் என்பது பொருள். இவர்களை அராபியர்கள் என்றும் அழைத்தனர்.
2. இஸ்லாம் சகோதரத்துவம் என்னும் கருத்தை முன்வைத்தது. இஸ்லாமியர் அனைவரும் சரிசமமானவர்கள் என்றும் கூறியது.
3. சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இக்கருத்துகளால் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டிருந்த அராபிய இனக் குழுக்களுக்கும், உலகின் பிற பகுதி வாழ்மக்களுக்கும் ஏற்புடையதாக இருந்தது.
4. இக்கருத்துகளால் ஒருங்கிணைக்கப்பட்டு அராபியர்கள் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாயினர். குறுகிய காலத்தில் அராபியர்கள் கீழை ரோமானியப் பேரரசையும் பாரசீக சாசனிட் அரசரையும் தோற்கடித்தனர்.
5. யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் புனித நகரமாக விளங்கிய ஜெருசலேம் அராபியர்களால் கைப்பற்றப்பட்டது. ஒட்டுமொத்த ஸ்பானியமும் பாரசீகமும் புதிய அராபியப் பேரரசின் கீழ்வந்தன.
6. இஸ்லாமிய கருத்துக்கள் மக்களிடம் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தி வரவேற்பைப் பெற்றன. இதனால் அராபியர்கள் எளிதாகப் பல பகுதிகளைக் கைப்பற்றினர்.
7. அராபிய தளபதி தார்க் தலைமையிலான படை மொராக்கோவையும், ஆப்பிரிக்காவையும் கைப்பற்றி பல நூற்றாண்டுகள் வாழ்ந்தனர்.
8. அராபியர்கள் அறிவியல் பூர்வமான கேள்வி ஞானம் உடையவர்கள், மருத்துவம், கணிதம் போன்ற துறைகள் தொடர்பான பலவற்றை இந்தியாவிலிருந்து கற்றுக் கொண்டனர்.
9. இந்தியாவிலிருந்த தட்சசீலம் பல்கலைக் கழகத்தில் அராபியர் பலர் மருத்துவத்துறை சார்ந்தவைகளை கற்றறிந்தனர். அராபிய மருத்துவர்கள் அறுவை சிகிச்சை நிபுணர்களாக புகழ்பெற்று விளங்கினர்.
10. ஏராளமான சமஸ்கிருத அறிவியல் புத்தகங்களை அராபிய மொழியில் மொழி பெயர்த்தனர்.
11. இவர்கள் காலத்து தலைநகரான பாக்தாத் அரேபிய இரவுகளின் நகரம் என அறியப்பட்ட நகரமாகும்.
12. புகழின் உச்சியில் இருந்த இந்த பேரரசு இஸ்லாமியர்களாக மாறிய துருக்கியர்கள் பாக்தாத்தை கைபற்றினர்